106657

OL/2010/22-T-III

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

22 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**முக்கியம்:** அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை எழுதுக.

(i) 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்' - இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

(ii) 'ஈன்றாளோடெண்ணக் கடவுளுமில்'
 (அ) இவ்வடி மூலம் யாருடைய சிறப்பு எடுத்துக்காட்டப்படுகிறது ?
 (ஆ) அச்சிறப்பு எவ்வாறு காட்டப்படுகிறது ?

(iii) "மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் ........." எனத் தொடங்கும் பாடலில் சடையப்ப முதலியாரின் வள்ளன்மையைக் கம்பர் எவ்வாறு புகழ்ந்துரைக்கின்றார் ?

(iv) "நீர் பேசுவது எமக்குப் பிடிக்கவில்லை. குலப் பெருமையால் புலமை சிறப்பதில்லை. புலமைத் திறத்தால் பிறந்த குலம் சிறக்கும். இதை அறிந்துகொள்ளும். நீர் வந்த காரியம் ?" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது ?

(v) 'மஞ்சுமஞ்சுங் கைப் பரராஜசேகர மன்னன்' இவ்வடியில் பரராஜசேகர மன்னனின் எச்சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது ?

(vi) 'ஒரு பதிவிரதையின் சரித்திரம்' என்ற கதையின் இறுதியில் நாம் ஒவ்வொருவரும் எதனை அடைய முயற்சிக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது ?

(vii) 'காலப் பெருநதியின் கால் நடையும் அப்படித்தான்' காலப் பெருநதி என்பது என்ன அணி ? அதனை விளக்குக.

(viii) சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றே கலம்பகம். கலம்பகம் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது என்ன ?

(ix) 'ஒங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது' இதனை எழுத்து வழக்கில் எழுதுக.

(x) 'கூடல் கூடல் கூடல்
 கூடிப் பின்னே குமரன் போயில் வாடல் வாடல்'
 (அ) இப்பாடல் வரிகள் இடம்பெறும் நூல் யாது ?
 (ஆ) அதனைப் பாடியவர் யார் ?

(20 புள்ளிகள்)

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) **புணுக் கழகளிக்கும் பொற்றொடியைக்** கண்டக்கால்
 நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் – நீணிலத்து
 மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
 பொற்றேர் நளனுருவாய்ப் போந்து.

(ஆ) அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல் நான் கிழவன்
 அசைந்தேன் என்றோ
 வம்பொன்று குழலாளை மணம்பேசி வரவிடுத்தார்
 மன்னர் தூதர்
 செம்பொன் செய் மணிமாடத் தெள்ளாற்றில் **நந்தி பதம்
 சேரார் ஆனைக்
 கொம்பன்றோ நம் குடிலில் குறுங்காலும் நெடுவளையும்
 குனிந்து பாரே.**

[பக். 2 ஐப் பார்க்க

(இ) செல்வமானது வெளியே உள்ள பருப் பொருளாதலால் வெள்ளத்தால் அழியும்; வெந்தழலால் வேகும். **கல்வியானது நமது உயிரைப் பற்றி உள்ளே இருக்கும் நுண் பொருள்** ஆகையால் வெள்ளதால் அழியாது; வெந்தழலில் வேகாது. செல்வமானது பொன், நிலம், வீடு முதலிய பருப்பொருளாய் இருப்பதால் அரசர்களால் கைப்பற்றவும் படும். கல்வியானது அறிவுருவான நுண்பொருளாகையால் அவர்களாற் கவரப்படமாட்டாது.

(ஈ) சக்கரக்கோட்டத்திலே விசயதர பூபதிக்காக என் தந்தை செய்த போரில், போர்க்களம் முழுதும் கறங்கு போல் திரிந்து, **பகைவர் யானை சேனையை யெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப்பூவென்ன நூறி** எறிந்து வாகை சூடினவன் கருணாகரனேயன்றோ! அவனுடைய நடை மேகத்தின் கதிபோல் இருக்கும்! அவன் வரும்போது தரையிலே ஒரு தேவன் நடந்து வருவது போலிருக்கும்!

*(20 புள்ளிகள்)*

3. 'இயற்கை அழகைக் கண்டு குதூகலிப்பதும் பெரியவர்கள் கூறுவதை உண்மையென நம்பிவிடுவதும் குழந்தையிடம் இயல்பாகக் காணும் குணங்களாகும்.' இக்கூற்றினை **நக்ஷத்திரக் குழந்தைகள்** என்ற கதையில் வரும் ரோஹிணி என்ற கதாபாத்திரத்தைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

**அல்லது**

எல்லாச் செல்வங்களையும் விடக் கல்விச் செல்வமே நிலையானது என்பதை மறைமலையடிகள் **கல்வியே அழியாச் செல்வம்** என்ற கட்டுரையில் வலியுறுத்தியிருக்குமாற்றை விளக்குக.

*(15 புள்ளிகள்)*

4. 'பண்டைக் காலப் புலவர்கள் பழமொழிகளின் ஊடாக நீதிக் கருத்துகளைத் தெளிவுற எடுத்துக் கூறியுள்ளனர்' – நீங்கள் படித்த எவையேனும் **நான்கு நீதிப் பாடல்களை** ஆதாரமாகக் கொண்டு அதனை விளக்குக.

**அல்லது**

'காதலையும் வீரத்தையும் ஒருங்கே கூறும் ஒரு சிற்றிலக்கியமே **முத்தொள்ளாயிரமாகும்**.' – ஆராய்க.

*(15 புள்ளிகள்)*

- 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவு செய்து எழுதுக.

5. (i) **மீன்பிடிகாரரர்** என்ற நாட்டார் பாடலில் மீனவர்களுடைய வாழ்க்கை எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது ?
(ii) **கடற்புறம்** என்ற பாடலில் மீனவர்களுடைய வாழ்க்கையை கவிஞர் எவ்வாறு சித்திரித்துக்காட்டுகின்றார் ?
(iii) பின்வரும் பாடல் அடிகளின் மூலம் புலப்படுத்தப்படும் இரு வேறுபட்ட உணர்வுகளை விளக்குக.

(அ) கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு
மக்காள் முழுப்படவுண்டு.

(ஆ) 'தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
வாழ்வில் இருள் தொடரும்'

*(10 புள்ளிகள்)*

6. 'சமூக ஏற்றத் தாழ்வுகளால் மனித வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை எடுத்துக்காட்டுவதே **பார்வைகள்** சிறுகதையின் நோக்காகும்.' - இக்கதைக் கருவினை வளர்த்துச் செல்வதற்கு தர்மலிங்கம், விமலன், டொக்டர் பரஞ்சோதி ஆகிய மூன்று கதாபாத்திரங்களும் உதவுமாற்றினை ஆராய்க.

*(10 புள்ளிகள்)*

7. **கவிச்சக்கரவர்த்தி** என்ற நாடகத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் தமிழ்ப் புலமை புலப்படும் **மூன்று** சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் விவரிக்குக.

*(10 புள்ளிகள்)*

* * *